MAY 2024

U/ID 22218/UCZ2A/ UCW2A/UCY2A/UCV2A

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. What do you mean by dependent branch?
   சார்பு கிளை பற்றி நீவிர் அறிவது என்ன?

2. Write short note on 'goods in transit'.
   சிறு குறிப்பு வரைக 'போக்குவரத்தில் உள்ள பொருட்கள்'.

3. What do you understand by inter-departmental transfer?
   துறைகளுக்குள் மாற்றம் என்பதை பற்றி நீ அறிவது யாது?

4. State any four advantages of departmental accounts.
   துறைவாரிக் கணக்குகளின் ஏதாவது நான்கு பயன்களைக் குறிப்பிடுக.

5. Identify the contents of hire purchase price.
   வாடகை கொள்முதல் விலையின் உள்ளடக்கங்கள் காண்க.

6. Briefly explain Installment purchase system.
   தவணை கொள்முதல் முறை சுருக்கமாக விளக்குக.

7. What is sacrificing Ratio?
   தியாக விகிதம் என்றால் என்ன?

8. How do you treat goodwill when a partner retires?
   ஒரு கூட்டாளி ஓய்வு பெறும் போது நற்பெயர் கணக்கை எவ்வாறு கணக்கிடுவாய்?

9. How do you prepare realization account when all partners are insolvent?
   அனைத்து கூட்டாளிகளும் திவால் ஆனால் தீர்வு கணக்கு எவ்வாறு தயார் செய்வாய்?

10. Mention the different settlement of accounts of dissolution.
    நிறுவன கலைப்பில் உள்ள கணக்கு தீர்வு முறைகளை குறிப்பிடுக.

11. Give the entries the realization of assets.
    சொத்துக்கள் விற்றதற்க்கான பதிவு தருக.

12. A and B are partners in a business sharing profits in the ratio of 5:3. They are decide to admit C into the firm giving him 1/6th share. Calculate new profit sharing ratio.

A மற்றும் B கூட்டாளிகளின் இலாப விகிதம் முறையே 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். மேலும் C என்ற கூட்டாளியை 1/6 பங்கு லாப விகிதத்தில் புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர். புதிய இலாப விகிதம் கணக்கிடுக.

PART B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions.

13. A Namakkal head office has a branch at Erode to which goods are invoiced at cost plus 20% from the details, prepare Branch A/c in the head office books:

	Rs.
Goods Sent to Branch	2,11,872
Cash sales	1,10,400
Credit sales	96,000
Cash received from Debtors	88,000
Debtors 1.1.2021	24,000
Stock on 1.1.2021	7,680
Stock on 31.12.2021	13,440

நாமக்கல் தலைமை நிறுவனமாக கொண்ட ஈரோடு கிளைக்கு சரக்குகளை 20% அடக்க விலைக்கு மேல் விலையிட்டு அனுப்புவதாக கொண்டு கிளைக் கணக்கினை தயார் செய்க.

	ரூ.
கிளைக்கு அனுப்பிய சரக்கு	2,11,872
ரொக்க விற்பனை	1,10,400
கடன் விற்பனை	96,000
கடனாளியிடம் இருந்து பெற்ற ரொக்கம்	88,000
கடனாளிகள் 1.1.2021	24,000
சரக்கிருப்பு 1.1.2021	7,680
சரக்கிருப்பு 31.12.2021	13,440

14. Apportion the following expenses on the basis of cost of goods sold ratio among the four departments. A, B, C, and D:

Sales (Rs.): A: 2,00,000; B:1,50,000; C: 1,00,000; D: 50,000

G.P. Ratio: 20% on sales.

Expenses: Salaries Rs. 6,000; Rent and Rates Rs. 1,500; Insurance Rs. 1,300

A, B, C மற்றும் D என்ற நான்கு துறைகள் அடக்க விலை விகிதத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட செலவினங்களை பிரிக்கவும்.

விற்பனை (ரூ.):A: 2,00,000; B:1,50,000; C: 1,00,000; D: 50,000

மொத்த இலாப விகிதம்: விற்பனையில் 20%

செலவினங்கள்: சம்பளம் ரூ.6,000 வாடகை மற்றும் விகிதங்கள் ரூ.1,500; காப்பீடு ரூ.1,300.

15. Explain the main features of Hire purchase system in detail.

வாடகை கொள்முதல் முறையின் சிறப்பு இயல்புகளை விரிவாக விளக்குக.

16. Calculate the amount of goodwill at three years' purchase of last five years average profits. The profits were:

I year — Rs. 19,200 II year — Rs. 28,800 III year — Rs. 40,000

IV year- Rs. 12,000 V year — Rs. 20,000.

கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு நன்மதிப்பை கணக்கிடுக. ஐந்து ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் மூன்று ஆண்டு கொள்முதல் என்ற முறையில் கணக்கிடுக. கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபம் முறையே.

முதல் ஆண்டு - ரூ.19,200 இரண்டாம் ஆண்டு - ரூ.28,800

மூன்றாம் ஆண்டு ரூ.40,000 நான்காம் ஆண்டு - ரூ.12,000

ஐந்தாம் ஆண்டு ரூ.20,000.

17. A, B and C are three partners sharing profits in the ratio of 4:3:2 respectively. B retires and the goodwill is valued at Rs. 10,800. No goodwill appears as yet in the books of the firm. Assuming that A and C will share profits in the future in the ratio of 5:3. Pass entries for goodwill in the case of Goodwill raised but written off.

A, B மற்றும் C என்ற மூன்று கூட்டாளிகளும் இலாபத்தினை முறையே 4:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். B விலகவே வணிக நற்பெயரின் மதிப்பானது ரூ.10,800 நிறுவனத்தின் ஏடுகளில் இதுவரை வணிக நற்பெயர் மதிப்பு ஏதுமில்லை. A-யும் C-யும் எதிர்வரும் காலங்களில் இலாபத்தினை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர் என அனுமானித்து கொள்ளவும். நற்பெயரின் மதிப்பானது ஏடுகளில் எழுதி நீக்கப்படுகின்றது, என கொண்டு வணிக நற்பெயருக்கான பதிவுகளை தருக.

18. Explain the modes of dissolution in partnership.

கூட்டாண்மைக் கலைப்பின் பல்வேறு வகைகளை விளக்குக.

19. From the following information. Compute net amount realized for different months in case of gradual realization.

	Debtors Rs.	Stock Rs.	Expenses Rs.
April	40,000	24,000	5,000
May	27,000	15,000	4,000
June	32,000	NIL	500

கீழே தரப்பட்டுள்ள விபரங்களிலிருந்து, பல்வேறு மாதங்களில் படிப்படியாக பகிர்ந்தளித்தலின் தீர்வு நிகர தொகையை கணக்கிடுக.

	கடனாளிகள் ரூ.	சரக்கிருப்பு ரூ.	செலவுகள் ரூ.
ஏப்ரல்	40,000	24,000	5,000
மே	27,000	15,000	4,000
ஜூன்	32,000	NIL	500

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. Prepare the Salem Branch a/c for the year 2020.

The following information relates to Salem Branch:

	Rs.	Rs.
Stock in trade at the branch 1.1.2020		15,000
Debtors at the branch 1.1.2020		30,000
Petty cash at the Branch on 1.1. 2020		300
Goods sent to branch during 2020		2,52,000
Cash sales		60,000
Received from debtors		2,10,000
Credit sales		2,28,000
Cheques sent to branch during 2020		
Salaries	9,000	
Rent	1,500	
Petty cash	1,100	11,600
Stock at the branch on 31.12.2020		25,000
Petty Cash 31.12.2020		200
Goods returned by the branch		2,000
Debtors on 31.12.2020		48,000

பின்வரும் விவரங்களைக் கொண்டு 2020 ஆண்டுக்குரிய சேலம் கிளைக் கணக்கினை தயார் செய்க:

கீழ்கண்ட விவரங்கள் சேலம் கிளை தொடர்பானவை:

	ரூ.	ரூ.
2020 ஜனவரி 1ல் கிளையில் சரக்கிருப்பு		15,000
2020 ஜனவரி 1ல் கடனாளிகள்		30,000
2020 ஜனவரி 1ல் சில்லரை ரொக்கம்		300
2020-ல் கிளைக்கு அனுப்பிய சரக்கு		2,52,000
ரொக்க விற்பனை		60,000
கடனாளிகளிடம் பெற்றது		2,10,000
கடன் விற்பனை		2,28,000
2020-ல் கிளைக்கு காசோலை அனுப்பியது:		
சம்பளம்	9,000	
வாடகை	1,500	
சில்லரை ரொக்கம்	1,100	11,600
31.12.2020-ல் கிளையின் சரக்கிருப்பு		25,000
31.12.2020-ல் கிளையின் சில்லரை ரொக்கம்		200
தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிய சரக்கு		2,000
31.12.2020-ல் கிளையின் கடனாளிகள்		48,000

21. The following purchases were made by a business house having three departments.

Dept. A - 1,000 units
Dept. B - 2,000 units } = at a total cost of
Dept. C - 2,400 units Rs. 1,00,000

Stocks on 1st January were:

Dept. A - 120 units

Dept. B - 80 units

Dept. C - 152 units

Sales were:

Dept. A - 1,020 units at Rs.20 each

Dept. B - 1,920 units at Rs.22.50 each

Dept. C - 2,496 units at Rs.25 each

The rate of gross profit is same in each case. Prepare departmental trading account.

ஒரு வியாபார நிறுவனம் மூன்று துறைகளைக் கொண்டது. பின்வரும் கொள்முதல்களை மேற்கொண்டது.

துறை A - 1,000 அலகுகள்
துறை B - 2,000 அலகுகள் } = மொத்த விலை ரூ.1,00,000
துறை C - 2,400 அலகுகள்

ஜனவரி 1-ல் இருப்பு பின்வருமாறு:

துறை A - 120 அலகுகள்;

துறை B - 80 அலகுகள்;

துறை C - 152 அலகுகள்;

விற்பனை பின்வருமாறு :

துறை A - 1,020 அலகுகள் ரூ.20 வீதம்

துறை B - 1,920 அலகுகள் ரூ.22.50 வீதம்

துறை C - 2,496 அலகுகள் ரூ.25 வீதம்

மொத்த இலாப விகிதம் நிலையானது. துறை வியாபார கணக்கை தயார் செய்க.

22. X purchased a machine on hire purchase system. The total cash price of the machine is Rs. 31,960, payable Rs. 8,000 down and three installments of Rs. 12,000, Rs. 10,000 and Rs. 4,000 at the end of first, second and third years respectively. Interest is charged at 5% per annum. Charge depreciation at 10% on straight line method. Prepare Ledger Accounts in the books of X.

வாடகை கொள்முதல் முறையில் X என்பவர் இயந்திரம் ஒன்றை வாங்கினார். இயந்திரத்தின் மொத்த ரொக்க விலை ரூ.31,960. முதலில் செலுத்திய ஒப்பந்த பணம் ரூ.8,000 மற்றும் மூன்று தவணையாக முறையே ரூ.12,000, ரூ.10,000 மற்றும் ரூ.4,000 அந்த ஆண்டின் இறுதியில் முதல், இரண்டு மற்றும் மூன்று ஆண்டுகள் செலுத்தப்பட வேண்டும். வட்டி வருடத்திற்கு 5% கணக்கிடுக. தேய்மானம் நேர் கோட்டு முறையில் 10%. X புத்தகத்தில் பேரேட்டு கணக்குகளை தயார் செய்க.

23. A and B are partners sharing profit and losses in the ratio 3:1. Their balance sheet on 31.12.2021 was as follows:

Liabilities	Rs.	Assets	Rs.
Creditors	37,500	Cash	22,500
General Reserve	4,000	Bills receivable	3,000
Capital A	30,000	Debtors	16,000
B	16,000	Stock	20,000
		Furniture	1,000
		Building	25,000
	87,500		87,500

On 1.1.2022, C is admitted on the following terms.

(a) C pays Rs. 10,000 as his capital for 1/5 share of profits

(b) Goodwill account be raised for Rs. 20,000

(c) Stock and furniture to be reduced by 10% and create 5% for doubtful debts.

(d) Value of building to be appreciated by 20%

(e) Capital accounts are to be adjusted as per new ratio and open current A/C for this purpose.

Show the ledger accounts of firm.

3:1 எனும் விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து கொண்டனர் A மற்றும் B எனும் இரு கூட்டாளிகளின் 31.12.2021 அன்று இருப்பு நிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
கடனீந்தோர்கள்	37,500	ரொக்கம்	22,500
காப்பு நிதி	4,000	பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு	3,000
முதல் A	30,000	கடனாளிகள்	16,000
B	16,000	சரக்கிருப்பு	20,000
		அறைகலன்	1,000
		கட்டிடம்	25,000
	87,500		87,500

'C' என்பவரை 1.1.2022 அன்று புதிய கூட்டாளியாக பின்வரும் கட்டுப்பாடுகளுடன் சேர்த்துக்கொண்டனர்.

(அ) 1/5 எனும் இலாப பங்கு வீதத்தில் ரூ.10,000 மூலதனமாக அளித்தார்.

(ஆ) ரூ.20,000-க்கு நற்பெயர் கணக்கு உருவாக்கப்பட்டது.

(இ) சரக்கிருப்பு மற்றும் அறைகலன் 10% குறைக்கப்பட்டது மற்றும் வராக்கடன் ஒதுக்கு 5%.

(ஈ) கட்டிடத்தின் மதிப்பு 20% உயர்த்தப்பட்டது.

(உ) புதிய விகிதத்தில் முதல் கணக்குகளை சரிசெய்து.

தேவையான பேரேடு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

24. X,Y, Z is in partnership. The following is their balance sheet as at 31.12.2020 on which date, they dissolved partnership. They share profits in the ratio of 5:3:2.

Liabilities	Rs.	Assets	Rs.
Capitals :		Premises	20,000
X	25,000	Plant	15,000
Y	7,500	Stock	15,000
Z	22,500	Debtors	30,000
Creditors	20,000		
X's loan	5,000		
	80,000		80,000

It was agreed to repay the amounts due to the partners as and when the assets were realized, Viz.

	Rs.
1.2.2021	15,000
1.4.2021	36,500
1.6.2021	23,500

Prepare a statement showing how the distribution to the partners should be made.

X, Y, Z மூவரும் கூட்டாளிகள் 31.12.2020 அன்றைய தேதியின்படி இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு: அவர் இலாப நட்டத்தை 5:3:2 என பகிர்ந்தனர்.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
மூலதனம்		வளாகம்	20,000
X	25,000	பொறிவகை	15,000
Y	7,500	சரக்கிருப்பு	15,000
Z	22,500	கடனாளிகள்	30,000
கடனீந்தோர்கள்	20,000		
X'ன் கடன்	5,000		
	80,000		80,000

கூட்டாளிகளுக்கு செலுத்த வேண்டிய தொகைகளைத் திரும்ப செலுத்த ஒப்புக்கொள்ளப்பட்டு, சொத்துக்கள் ரொக்கமாக மாற்றப்பட்டது.

	ரூ.
1.2.2021	15,000
1.4.2021	36,500
1.6.2021	23,500

கூட்டாளிகளுக்கு பகிர்வு எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பதை காண்பிக்கும் அறிக்கையை தயார் செய்க.

———————